## May 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. புதிய ஊரக வேலைவாய்ப்பு சட்டம் (விபி ஜிராம் ஜி) ஜூலை 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டது.

(i) மேலும், அன்றைய தினத்தில் இருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (100 நாள் வேலைத் திட்டம்) ரத்து செய்யப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டது.

(ii) காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்துக்கு மாற்றான விபி ஜிராம் ஜி திட்ட மசோதா, கடந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது.

(iii) புதிய சட்டத்தின்படி, ஒரு நிதியாண்டில் 100 நாள் வேலை வாய்ப்பு என்பது 125 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது. முந்தைய திட்டம் நூறு சதவீதம் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்ட நிலையில், புதிய திட்டத்தின்கீழ் மாநிலங்களுடன் மத்திய அரசு நிதிச் சுமையைப் பகிர்ந்துகொள்கிறது.

(iv) இந்நிலையில், இந்தச் சட்டம் அமலாவது குறித்து மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 100 நாள் வேலைத் திட்டத்துக்கு மாற்றாக நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 2026, ஜூலை 1-ஆம் தேதி முதல் விபி ஜிராம் ஜி சட்டம் அமலுக்கு வருகிறது.

(v) ஜூன் 30-ஆம் தேதி வரை 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் விபி ஜி ராம் ஜி திட்டத்துக்கு மாற்றப்படும்.

(vi) விபி ஜிராம் ஜி திட்டத்தின் கீழ் பணியாளர் அட்டைகள் வழங்கப்படும் வரை ஏற்கெனவே 100 நாள் வேலைத் திட்டத் தின்கீழ் விநியோகிக்கப்பட்ட அட்டைகள் செல்லுபடியாகும். வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (இ-கேஒய்சி) சேவைகள் நிலுவையில் இருக்கும் பணியாளர்களுக்கு வேலைகளை மறுக்கக் கூடாது. பணியாளர் அட்டைகள் இல்லையென்றாலும் பதிவு செய்தவர்களுக்கு கிராம ஊராட்சிகள் அளவில் வேலைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

(vii) ஊதியம், குறைகளுக்குத் தீர்வு, நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் கலந்தாலோசித்த பின் வரைவு விதிகள் வெளியிடப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

2. புதுச்சேரி முதல்வராக மீண்டும் என்.ரங்கசாமி புதன்கிழமை (மே 13) பதவி ஏற்கிறார். அவருடன் என்.ஆர்.காங்கிரஸைச் சேர்ந்த 3 பேரும், பாஜகவைச் சேர்ந்த 2 பேரும் அமைச்சர்களாகப் பதவியேற்க உள்ளனர்.

(i) 30 உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைக்கு கடந்த ஏப்.9-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் ரங்கசாமி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது.

3. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், 3 நாள்கள் அரசுமுறைப் பயணமாக புதன்கிழமை (மே 13) சீனாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

(i) சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் அழைப்பையேற்று மேற்கொள்ளப்படும் இப்பயணம், 9 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க அதிபர் ஒருவர் சீனாவுக்குச் செல்லும் முதல் நிகழ்வாகும். முன்னதாக, 2017-ஆம் ஆண்டு டிரம்ப் தனது முதல் பதவிக்காலத்தின் போது சீனா சென்றதே கடைசியாக இருந்தது.

(ii) சீன தலைநகர் பெய்ஜிங்கில் புதன்கிழமை மாலை வந்தடையும் டிரம்ப்புக்கு வியாழக்கிழமை அதிகார பூர்வ வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு உறவுகள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

(iii) அதைத் தொடர்ந்து, 'டெம்பிள் ஆஃப் ஹெவன்' வழிபாட்டுத் தலத்துக்குச் செல்லும் டிரம்ப், பின்னர் சீன அதிபர் அளிக்கும் அரசு விருந்தில் பங்கேற்கிறார்.

(iv) இந்தப் பயணத்தின்போது இருநாட்டுத் தலைவர்களுக்கிடையேயான சந்திப்புகளில், தைவான் விவகாரம், வர்த்தகத்

தீர்வுகள், மத்திய கிழக்கு போர்ச்சூழல் ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

(v) ஹோர்முஸ் நீரிணை பதற்றத்தால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிபொருள் நெருக்கடி குறித்தும் இருதலைவர்களும் முக்கியமாக ஆலோசிக்கவுள்ளனர். ஏனெனில், ஈரான் எண்ணெய்யின் மிகப்பெரிய இறக்குமதியாளராக சீனா இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

4. பிலிப்பின்ஸ் நாட்டின் துணை அதிபர் சாரா துதெர்தேவிற்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் பதவி நீக்கத் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

(i) 2022 தேர்தலில் கூட்டணியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற அதிபர் ஃபெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் மற்றும் சாரா துதெர்தே இடையே தற்போது கடும் அரசியல் மோதல் நிலவி வருகிறது.

5. வரும் மே 15-ஆம் தேதி முதல் பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம், 4 ஐரோப்பிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள உள்ளார். இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) வரும் மே 15 முதல் மே 20 வரை ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பிரதமர் மோடி அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

(ii) முதலில் ஐக்கிய அரபு அமீரகம் செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் ஷேக் முகமது பின் ஸயத் அல்நயானை சந்திக்க உள்ளார். இதைத்தொடர்ந்து நெதர்லாந்து, ஸ்வீடன் செல்லும் அவர், அந்நாட்டுப் பிரதமர்களை சந்திக்க உள்ளார்.

(iii) அதன் பின்னர் நார்வே செல்லும் அவர், 3-ஆவது இந்தியா- நார்டிக் உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளார். அந்நாட்டுக்கு 43 ஆண்டுகளுக்குப் பின்னர் செல்லும் முதல் இந்திய பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தொடர்ந்து அவர் இத்தாலி செல்கிறார்.

(iv) பிரதமர் மோடியின் இந்தப் பயணம் ஐரோப்பாவுடன் பல்வேறு துறைகளில் இந்தியாவின் கூட்டுறவை மேலும் வலுவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. வரும் காரீஃப் பருவத்துக்குத் தேவையான உரங்கள் இருப்பில் உள்ளன. எனவே அச்சமடைந்து உரங்களை அதிக அளவில் கொள்முதல் செய்ய வேண்டாம்' என்று விவசாயிகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

(i) மேற்கு ஆசிய நிலவரங்கள் தொடர்பாக மத்திய அமைச்சகங்களுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டம் தில்லியில் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் மத்திய உரத் துறை கூடுதல் செயலாளர் அபர்ணா எஸ்.சர்மா கூறியதாவது:

(i) உள்நாட்டு உர உற்பத்திக்கு துணை நிற்கவும், வரும் காரீஃப் பருவத்துக்குத் தேவையான உரங்களை இருப்பு வைக்கவும் மத்திய அரசு யூரியாவை இறக்குமதி செய்து வருகிறது. முக்கியமான உரங்களின் அதிகபட்ச சில்லறை விலை நிலையாக உள்ளது. வரும் காரீஃப் பருவத்துக்குத் தேவையான உரங்கள் இருப்பில் உள்ளன. எனவே அச்சமடைந்து உரங்களை அதிக அளவில் கொள்முதல் செய்ய வேண்டாம் என்று விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன்.

(ii) உரப் பதுக்கலை தடுக்கவும் உரங்களை வணிகப் பயன்பாட்டுக்கு திருப்பி விடுவதைத் தடுக்கவும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்தியாவின் உரப் பாதுகாப்பு தொடர்ந்து நன்கு நிர்வகிக்கப்படுகிறது.

(iii) காரீஃப் பருவத்துக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ள உரங்களின் அளவு 51 சதவீதமாக உள்ளதாக வேளாண் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. இதுவழக்கமான இருப்பான 33 சதவீதத்தை விட அதிகமாகும். இந்த ஆண்டுக்கான காரீஃப் பருவத்துக்கு 390.54 லட்சம் டன் உரங்கள் தேவை என்று வேளாண் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது.

(iii) உரங்களுக்கான நெருக்கடியான காலகட்டத்தைத் தொடர்ந்து உரங்களின் உள் நாட்டு உற்பத்தி 76.78 லட்சம் டன்னாகவும் இறக்குமதி 19.94 லட்சம் டன்னாகவும் இருந்தன.

(iv) பல்வேறு உலக நாடுகளிடம் இருந்து 7 லட்சம் டன் என்பிகே கூட்டு உரங்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதுத விர, 12 டன் டை அமோனியம் பாஸ்பேட், 4 லட்சம் டன் டிரிபிள் சூப்பர் பாஸ்பேட், 3 லட்சம் டன் அமோனியம் சல்பேட் ஆகிய உரங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இது இன்னும் 15-20 தினங்களில் தொடங்க உள்ள காரீஃப் பருவத்துக்குத் தேவையான உரங்களின் இருப்பை உறுதி செய்யப் போதுமானது.

(v) உரங்களின் இருப்பு தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட செயலாளர்கள் குழு வாராந்திர அடிப்படையில் ஆய்வு செய்து வருகிறது.

(vi) யூரியா பையின் விலை நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. அதேவேளையில் டிஏபி உரம் 50 கிலோ பையின் விலை ரூ.1,350ஆக உள்ளது.

(vii) நாடு முழுவதும் உரங்கள் சரிசமமாகப் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று கருதி விவசாயிகள் முதலில் அவசரமாக அவற்றை வாங்கினர். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டாம் என்பதே எங்கள் வேண்டுகோள் என்றார் அவர்.

7. இந்தியாவுக்கு வழங்க வேண்டிய கடனில் ரூ.476 கோடியை (50 மில்லியன் டாலர்) மாலத்தீவு திருப்பிச் செலுத்தியதாக அந்நாட்டு அதிபர் முகமது மூயிஸ் தெரிவித்தார்.

(i) பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) மூலம் மாலத்தீவுக்கு குறுகிய கால கடன் முறையின்கீழ் இந்தியா நிதியுதவி அளித்து வருகிறது. இந்நிலையில் இரண்டாம் கட்டமாக 50 மில்லியன் டாலர் கடனை மாலத்தீவு செலுத்தியுள்ளது. ஏற்கெனவே 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 50 மில்லயன் டாலர் குறுகிய கால கடன் தொகையை மாலத்தீவு செலுத்தியிருந்தது. இது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் முகமது மூயிஸ் கூறியதாவது:

- கடந்த 2019-ஆம் ஆண்டு நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட முந்தைய அரசு 50 மில்லியன் டாலர்களுக்கான குறுகிய கால கடன் பத்திரங்களை குறிப்பிட்ட இடைவெளியில் வெளியிட்டு பாரத ஸ்டேட் வங்கியிடம் இருந்து நிதி திரட்டியது. குறிப்பாக ஓராண்டுக்கு ஒரு முறை இந்தக் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் முந்தைய அரசு அந்தக் கடன்களை திருப்பிச் செலுத்த எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நான் அதிபராக பதவியேற்றது முதல் தற்போது வரை 100 மில்லியன் டாலர்கள் (ரூ.952 கோடி) கடன் தொகை இந்தியாவுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்த தவணையாக 50 மில்லியன் டாலர்கள் இந்தியாவிடம் வரும் செப்டம்பர் மாதம் திருப்பித் தரப்படவுள்ளது. இதன்மூலம் பொதுமக்களை 150 மில்லியன் டாலர்கள் கடன் சுமையில் இருந்து மீட்டுள்ளோம்என்றார்.
- கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வந்த மாலத்தீவுக்கு குறுகிய கால கடன் பத்திரங்கள் கடன்கள் வாயிலாக வட்டியில்லா கடனை இந்தியா வழங்கியது குறிப்பிடத்தக்கது.

8. குஜராத் மாநிலத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற சோம்நாத் கோயில் கடந்த 1951-ஆம் ஆண்டு மே 11-ஆம் தேதி புனரமைக்கப்பட்டு மீண்டும் வழிபாட்டுக்கு நாட்டின் முதல் குடியரசுத் தலைவரான ராஜேந்திர பிரசாதால் திறக்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிறது. இது சோம்நாத் அம்ருத் மகோத்ஸவமாக கொண்டாடப்படுகிறது.

(i) இதையொட்டி சோம்நாத் கோயிலுக்கு பிரதமர் மோடி வந்தார். கோயிலில் அவர் மகா பூஜை நடத்தியதுடன், ஜல அபிஷேகம் செய்து, பிரார்த்தனை செய்தார்.

9. 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின் அடிப்படையில், இந்தியாவில் அதிகரித்து வரும் சாலை விபத்துகளின் பகுப்பாய்வு; இதில் தமிழ்நாட்டில் நிலவும் கவலைக்கிடமான சூழலின் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(i) இந்தியாவில் சாலை விபத்துகளின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 4.91 லட்சத்திலிருந்து, 2024 ஆம் ஆண்டில் 4.95 லட்சமாக அதிகரித்துள்ளது.

(ii) நாடு முழுவதும், 2024 ஆம் ஆண்டில் சாலை விபத்துகள் 1.99 லட்சம் உயிர்களைப் பலிகொண்டன; இது சராசரியாக தினமும் சுமார் 546 உயிரிழப்புகள் என்ற விகிதத்தில் நிகழ்துள்ளது.

(iii) தமிழ்நாடு குறித்த புள்ளிவிவரங்கள்:

- அதிக எண்ணிக்கையிலான விபத்துகள் நிகழும் மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து நீடிக்கிறது; 2023 ஆம் ஆண்டில் 69,491 சாலை விபத்துகள் பதிவான நிலையில், 2024 ஆம் ஆண்டில் 69,828 விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளின் விளைவாக 71,868 பேர் காயமடைந்தனர்.
- 2024 ஆம் ஆண்டில் சாலை விபத்துகள் காரணமாக இம்மாநிலத்தில் 20,390 உயிரிழப்புகள் ஏற்பட்டன; இது நாடு முழுவதும் நிகழ்ந்த மொத்த உயிரிழப்புகளில் 10.2 சதவீதமாகும்.

- தமிழ்நாட்டில், தற்செயலாக நிகழும் அனைத்து வகையான உயிரிழப்புகளிலும் 42.6 சதவீதத்திற்குச் சாலை விபத்துகளே காரணமாக அமைகின்றன.

(iv) NCRB-இன் மாநில வாரியான உயிரிழப்புத் தரவரிசை (2024)

சாலை விபத்து உயிரிழப்புகளுக்கு அதிக அளவில் பங்களிக்கும் முதல் மூன்று மாநிலங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன; இவை மூன்றும் இணைந்து இந்தியாவில் நிகழும் மொத்த சாலை விபத்து உயிரிழப்புகளில் 33.6 சதவீதத்தை உருவாக்குகின்றன:

1. உத்தரப் பிரதேசம்: 27,071 உயிரிழப்புகள்.

2. தமிழ்நாடு: 20,390 உயிரிழப்புகள்.

3. மகாராஷ்டிரா: 19,475 உயிரிழப்புகள்.

(v) அதிகம் பாதிக்கப்படும் பிரிவினர் மற்றும் வாகனங்கள்

- இருசக்கர வாகனங்கள்: நாடு முழுவதும், இருசக்கர வாகன விபத்துகளில் 84,599 பேர் உயிரிழந்தனர். இத்தகைய உயிரிழப்புகள் அதிக அளவில் நிகழ்ந்த மாநிலமாகத் தமிழ்நாடு பதிவாகியுள்ளது; இங்கு 11,786 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன.
- பாதசாரிகள்: நாடு முழுவதும் நிகழ்ந்த 25,769 பாதசாரி உயிரிழப்புகளில், தமிழ்நாட்டில் மட்டும் 4,176 உயிரிழப்புகள் (16.2%) பதிவாகியுள்ளன.
- கார்கள்: நாடு முழுவதும் கார் விபத்துகளில் 23,739 பேர் உயிரிழந்தனர்.

(vi) விபத்துகளுக்கான காரணங்கள்

- அதிவேகமாக வாகனங்களை இயக்குவதே உயிரிழப்புகளுக்கான முதன்மையான காரணமாகத் திகழ்கிறது; நாடு முழுவதும் நிகழும் மொத்த உயிரிழப்புகளில் 58 சதவீதத்திற்கு இதுவே காரணமாக அமைகிறது. தமிழ்நாட்டில் அதிவேகத்தால் ஏற்பட்ட மரணங்கள் 13,765 ஆகப் பதிவாகியுள்ளன.
- அபாயகரமான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதல்: 26.3% மரணங்களுக்குக் காரணமாகிறது.
- ஓட்டுநர் சோர்வு: ஓட்டுநர்கள் வாகனம் ஓட்டும்போது தூங்கிவிடுவதால், பல விபத்துக்கள் இரவிலும் அதிகாலையிலும் நிகழ்கின்றன.
- பொறுப்பற்ற நடத்தை: நகரங்களில் உள்ள இளைஞர்களிடையே "பைக் பந்தயம்" மற்றும் "ஆட்டோ பந்தயம்" போன்ற போக்குகள் அதிகரித்து வருகின்றன.
- போதைப்பொருள் துஷ்பிரயோகம்: குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல் அல்லது போதைப்பொருள் பயன்பாடு 1.9% விபத்து மரணங்களுக்குக் காரணமாக அமைந்தது.
- போதிய பயிற்சி இல்லாமை: உண்மையான ஓட்டுநர் திறனை நிரூபிக்காமலேயே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் (RTOs) மூலம் ஓட்டுநர் உரிமங்கள் எளிதாகப் பெறப்படுகின்றன.
- உள்கட்டமைப்புச் சிக்கல்கள்: இந்தியாவின் சாலை வலையமைப்பில் தேசிய நெடுஞ்சாலைகள் 2.1% மட்டுமே என்றாலும், அங்குதான் 29.8% விபத்துக்கள் நிகழ்கின்றன. தமிழ்நாட்டில், மாநில நெடுஞ்சாலைகளில் 21,688 விபத்துக்கள் நிகழ்ந்து, 6,099 மரணங்கள் ஏற்பட்டன.

(vii) அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகள்

- ஓய்வு நேரங்கள்: நீண்ட தூரப் பயணங்களின் போது தொடர்ச்சியாக வாகனம் ஓட்டுவதற்குப் பதிலாக, ஓட்டுநர்கள் போதுமான ஓய்வு எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- வாகனப் பராமரிப்பு: தனியார் வாகனங்களுக்கும் கூட, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வழக்கமான வாகனப் பராமரிப்பின் முக்கியத்துவத்தை இத்துறை வலியுறுத்துகிறது.
- அமலாக்கம்: கடுமையான சட்ட அமலாக்கமின்மை மற்றும் மோசமான சாலை உள்கட்டமைப்பு ஆகியவை இந்த நெருக்கடிக்குக் காரணமாகின்றன. மேலும், போக்குவரத்து விதிகளை இன்னும் கடுமையாக அமல்படுத்துவது அவசியம் என்பதையும் இது உணர்த்துகிறது.

அரசாங்கம் ஆலோசனைகளை வழங்கினாலும், பொதுமக்களின் இணக்கமின்மை மற்றும் ஒழுக்கமின்மை ஒரு பெரிய

தடையாக உள்ளது. விபத்துக்களைக் குறைப்பதற்கு, தனிநபர் விழிப்புணர்வு, மிதமான வேகம் மற்றும் போக்குவரத்து விதிகளை மதித்தல் ஆகியவற்றின் கலவை தேவைப்படுகிறது